# மேல்நிலை இரண்டாமாண்டு

## கணிப்பொறியியல்

### மாதிரி வினாத்தாள் - 1

நேரம் : 2.30 மணி] [மொத்த மதிப்பெண் : 70

**பகுதி – அ**

**சரியான விடையைத் தேர்ந்தெடு:** $15 \times 1 = 15$

1. விட்டு விட்டு தோன்றும் நெடும்பட்டை எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(அ) சுட்டி (ஆ) செருகுமிடம்

(இ) விசைப் பொத்தான் (ஈ) நுழைவுப் பொத்தான்

2. கீழ்காணும் எந்த விருப்பத்தேர்வு, தவறாக தட்டச்சு செய்யப்பட்ட சொல்லை தானாகவே மாற்றப் பயன்படுகிறது?

(அ) தானியங்கு சரிசெய்யும் வசதி (ஆ) Backspace பொத்தான்

(இ) Delete பொத்தான் (ஈ) நுழைவுப் பொத்தான்

www.Padasalai.Net

3. சிற்றறையில் முன்புறமாக நகர்வதற்கு பயன்படுத்தப்படும் பொத்தான்:

(அ) Shift + Tab (ஆ) Tab (இ) Arrow (ஈ) Esc

4. ஒரு பக்கத்தின் ஓர அளவுகள் சரியாக தெரியவில்லை எனில், கீழ்காணும் எந்த வசதியை பயன்படுத்தி ஓரங்களை மாற்றலாம்?

(அ) Ruler (ஆ) View (இ) Page preview (ஈ) Page style உரையாடல் பெட்டி

5. ஸ்டார் ஆஃபீஸ் கால்க்-ல், தனித்த நுண்ணறை முகவரியாக மாற்றும் குறியீடு:

(அ) % (ஆ) $ (இ) & (ஈ) #

7. அட்டவணைத் தாளில், தொடர்ச்சியாக உள்ள நுண்ணறைகள் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(அ) பரப்பு (ஆ) சுட்டு (இ) நுண்ணறை (ஈ) புலம்

8. தலைமைக் கணிப்பொறிகளில் முதன்மையாக பயன்படுத்தப்படும் தரவுதளம்:

(அ) படிநிலை (ஆ) ஒற்றைக் கோப்பு (இ) வலையமைப்பு (ஈ) உறவுநிலை

9. கீழ்கண்ட C++ நிரல் இயங்கும்போது, x-ன் மதிப்பு என்ன?

```
a = 10;
a = ++a;
x = a++;
```

(அ) 10 (ஆ) 11 (இ) 12 (ஈ) 0

9. கீழ்கண்ட C++ நிரல் இயங்கும்போது, y-ன் மதிப்பு என்ன?

```
a = 25;
b = 110;
y = (a > b) ? a % a : b % a
```

(அ) 110 (ஆ) 25 (இ) 10 (ஈ) 0

www.Padasalai.Net

10. ஒரு நிரல் இயங்கும் நேரத்தில், ஒரு மாறியின் மதிப்பு மாற்ற முடியாதது என்பதை உணர்த்தும் தகுதியாக்கி:

(அ) const (ஆ) static (இ) short (ஈ) signed

11. பொருத்துக:

(a) while - (1) தேர்ந்தெடுப்பு கூற்று

(b) if - (2) கிளைபிரிப்பு கூற்று

(c) do …. while - (3) நுழைவு சோதிப்பு மடக்கு

(d) switch - (4) வெளியேறல் சோதிப்பு மடக்கு

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (அ) | 3 | 4 | 2 | 1 |
| (ஆ) | 4 | 2 | 1 | 3 |
| (இ) | 1 | 2 | 4 | 3 |
| (ஈ) | 3 | 1 | 4 | 2 |

12. பின்வரும் எந்த செயற்கூறு முன்வடிவு, ஒரு முழுஎண் மற்றும் ஒரு மிதப்புப் புள்ளி எண்-யை பெற்று முழு எண்-யை திருப்பி அனுப்பும்?

(அ) void fun(char m); (ஆ) int max (float x);

(இ) int max (int m, float x); (ஈ) int max (char m; float x);

13. பின்வருவனவற்றுள் எது மாறியின் வரையெல்லை அல்ல?

(அ) உள்ளமை (ஆ) கோப்பு (இ) இனக்குழு (ஈ) குறியுடன்

14. பின்வருவனவற்றுள் பொருந்தா ஒன்றை தேர்ந்தெடு:

(அ) Public (ஆ) Private (இ) Pointer (ஈ) Protected

15. அழிப்பி இந்த குறியை முன்னொட்டாக கொண்டிருக்க வேண்டும்:

(அ) # (ஆ) ~ (இ) & (ஈ) ^

www.Padasalai.Net

## பகுதி -- ஆ

**ஏதேனும் ஆறு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்:** 6 × 2 = 12

**வினா எண் 22க்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

16. ஸ்டார் ஆஃபீஸ்-ன் பயன்பாடுகள் யாவை?

17. தொங்கும் உள்தள்ளல் பற்றி சிறு குறிப்பு வரைக.

18. ஸ்டார் ஆஃபீஸ் கால்க் இயக்கிகளின் கணிப்பீட்டு வரிசை முறையை எழுதுக.

19. சார்புகள் என்றால் என்ன? ஸ்டார் ஆஃபீஸ் கால்க்-ல் ஏதேனும் இரண்டு எடுத்துக்காட்டுகளை தருக.

20. முதன்மைத் திறவுகோல் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.

21. C++ல் சிறப்பு சொற்கள் என்றால் என்ன? ஏதேனும் நான்கு எடுத்துக்காட்டு தருக.

22. பின்வரும் நிரலை படித்து, கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிக்கவும்.

```
int ctr=1, sum = 0, check = 1;
do
{
```

```
  cout << ctr;
  sum += ctr;
  ctr += 2;
  check = (ctrl < 11);
} while (check);
```

(அ) மேற்கண்ட நிரலில் அமைந்துள்ள கட்டுப்பாட்டு மாறி எது?

(ஆ) மேற்கண்ட நிரலின் வெளியீடு என்ன?

23. அணி என்றால் என்ன? அதன் வகைகளை எழுதுக.

24. நேரடிப் பாதுகாப்பு என்றால் என்ன?

## பகுதி – இ

**ஏதேனும் ஆறு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்:** 6 × 3 = 18

**வினா எண் 31க்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

www.Padasalai.Net

25. ஒரு ஆவணத்தை முதல் முறை சேமிப்பதற்கான வழிமுறைகளை எழுதுக.

26. ஸ்டார் ஆஃபீஸ் ரைட்டரில், ஒரு ஆவணத்தை தட்டச்சு செய்யும் போது ஏற்படும் எழுத்துப்பிழைகளை திருத்துவதற்கான வழிமுறைகளை எழுதுக.

27. பல்லூடகம் என்றால் என்ன?

28. கீழே கொடுக்கப்பட்டுள்ளவைகளுக்கு விரிவாக்கம் தருக.

(1) GIF (2) JPEG (3) MIDI (4) AIFF (5) AVI (6) MPEG

29. பின்வருவனவற்றுக்கு சிறு குறிப்பு வரைக:

(1) Master Page (2) Slide Transition

30. நிபந்தனை செயற்குறியை பற்றி எடுத்துக்காட்டுடன் குறிப்பு வரைக.

31. பின்வரும் நிரலின் வெளியீடு என்ன?

```
#include <iostream.h>
#include <conio.h>
void main( )
{
  int num = 1784, s=0, d=0, x;
```

```
        x = num;
        clrscr( );
         for ( ; num > 0; )
         {
                d = num % 10;
                s += d;
                num = num /10;
          }
      cout << “\n The sum of digits of ” << x << “ is :” << s;
      getch( );
}
```

32. பண்புனர்த்தி என்றால் என்ன? அதன் விளைவுகள் யாவை?

33. அழிப்பி வரையறுத்தம் மற்றும் பயன்பாட்டுக்கான விதிமுறைகள் யாவை?

www.Padasalai.Net

### பகுதி – ஈ

**கொடுக்கப்பட்டுள்ள அனைத்து வினாக்களுக்கு விடையளி:** 5 × 5 = 25

34. அட்டவணை வடிவூட்டல் கருவிப்பட்டையிலுள்ள குறும்படங்களின் படம் வரைந்து அதன் செயல்களை விளக்குக.

(அல்லது)

ஸ்டார் ஆஃபீஸ் ரைட்டரில் ஒரு சொல்லுக்கு பதிலாக பிரிதொரு சொல்லை புகுத்தும் வழிமுறைகளை எழுதுக.

35. மின் அட்டவணை செயலியின் நன்மைகள் யாவை?

(அல்லது)

ஸ்டார் ஆஃபீஸ் கால்க்-ல் உள்ள வடிவூட்டல் விருப்பத் தேர்வுகள் யாவை?

36. தரவுதளத்தின் பல்வேறு வகைகள் யாவை?

(அல்லது)

http://www.trbtnpsc.com/2018/07/12th-plus-two-official-model-question-papers-and-answer-keys-download-2018-2019.html

C++ன் தேர்ந்தெடுப்பு கூற்றின் தொடரியல்களை எழுதி பொருத்தமான எடுத்துக்காட்டுடன் விளக்குக.

37. குறிப்பு மூலம் அழைத்தலை பொருத்தமான எடுத்துக்காட்டுடன் விளக்குக.

(அல்லது)

சரங்கள் என்றால் என்ன? C++ நிரலாக்க மொழியில் உள்ள சரச் செயற்கூறுகளை பொருத்தமான எடுத்துக்காட்டுடன் விளக்குக.

38. செயற்குறி பணிமிகுப்புக்கான விதிமுறைகள் யாவை?

(அல்லது)

+ செயற்குறியை பயன்படுத்தி, இரண்டு சரங்களை இணைப்பதற்கான C++ நிரல் ஒன்றை எழுதுக.

*****

www.Padasalai.Net

# மேல்நிலை இரண்டாமாண்டு

## கணிப்பொறியியல்

## மாதிரி வினாத்தாள் - 2

நேரம் : 2.30 மணி] [மொத்த மதிப்பெண் : 70

### பகுதி – அ

**சரியான விடையைத் தேர்ந்தெடு:** $15 \times 1 = 15$

1. ஸ்டார்ஆஃபிஸில் எத்தனைப் பயன்பாடுகள் உள்ளன?

(அ) 3 (ஆ) 5 (இ) 4 (ஈ) 2

2. அனைத்து வடிவூட்டல் விருப்பங்களும் எந்தப் பட்டித் தேர்வில் உள்ளன?

(அ) Format (ஆ) Tool bar (இ) Menu bar (ஈ) Title bar

3. எந்தப் பொத்தானை அழுத்தி எழுத்துப் பிழைத்திருத்தும் உரையாடல் பெட்டியைப் பெறலாம்?

(அ) F5 (ஆ) F7 (இ) F2 (ஈ) F1

www.Padasalai.Net

4. எது ஒரு குறிப்பிட்ட வரிசை மற்றும் நெடுவரிசையைக் கொண்ட அமைப்பு ஆகும்?

(அ) அட்டவணை (ஆ) கட்டம் (இ) நுண்ணறை (ஈ) வரிசை

5. ரூலரின் எந்த நிறப்பகுதி, ஓர அளவின் மேல் பகுதியைக் குறிக்கிறது?

(அ) சாம்பல் (ஆ) சிவப்பு (இ) பச்சை (ஈ) கருப்பு

6. அட்டவணைச் செயலி (Spreadsheet) என்ற சொல் இதை மட்டுமே குறிக்கிறது:

(அ) மென்பொருள் (ஆ) வன்பொருள்

(இ) மென்பொருள் தொகுப்பு (ஈ) அட்டவணைத் தாள்

7. வடிகட்டி என்பது ஒரு வகையான:

(அ) வடிகட்டி (ஆ) வினவல் (இ) Auto Filter (ஈ) Standard Filter



http://www.trbtnpsc.com/2018/07/12th-plus-two-official-model-question-papers-and-answer-keys-download-2018-2019.html

www.Padasalai.Net www.TrbTnps.com

8. GIF முறை எத்தனை வண்ணத்தட்டு அமைப்பிற்குள் அடங்கியது?

(அ) 8 Bits (ஆ) 16 Bits (இ) 24 Bits (ஈ) 20 Bits

9. குறிப்பெயர்கள் இவ்வாறு என்றும் அழைக்கப்படுகின்றன?

(அ) மாறிகள் (ஆ) மாறிலிகள் (இ) முழுஎண் (ஈ) சிறப்புச் சொற்கள்

10. தரவினங்களை எத்தனை பெரும் வகையினங்களாகப் பிரிக்கலாம்?

(அ) 3 (ஆ) 2 (இ) 5 (ஈ) 4

11. முன்-செயலி நெறியுறுத்தம் இந்தக் குறியுடன் தொடங்கும்:

(அ) # (ஆ) < (இ) > (ஈ) +

12. சி++ நிரல்களின் கட்டமைப்புக் கூறுகளாகத் திகழ்பவை யாவை?

(அ) செயற்கூறுகள் (ஆ) செயற்குறிகள்

(இ) செயலுருபுகள் (ஈ) மாறிகள்

www.Padasalai.Net

13. நிரல் குறிமுறையின் மறுபயனாக்கம் இதை சிக்கனமாகப் பயன்படுத்த உதவும்:

(அ) நினைவகம் (ஆ) நேரம் (இ) வேகம் (ஈ) அளவு

14. அணி எத்தனை வகைப்படும்?

(அ) 2 (ஆ) 5 (இ) 3 (ஈ) 4

15. தகவல் தொழில்நுட்பத்தின் பலன்கள் சாதாரண மனிதர்களைச் சென்றடைய குறைந்தபட்சம் எத்தனை தொழில்நுட்பக் கூறுகள் தேவை?

(அ) 3 (ஆ) 5 (இ) 4 (ஈ) 2



http://www.trbtnpsc.com/2018/07/12th-plus-two-official-model-question-papers-and-answer-keys-download-2018-2019.html

## பகுதி – ஆ

**ஏதேனும் ஆறு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்:** 6 × 2 = 12

**வினா எண் 24க்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

16. சொற்செயலி என்றால் என்ன?

17. தானியங்கு சரி செய்யும் வசதி என்றால் என்ன?

18. ஸ்டார் ஆஃபீஸ் ரைட்டரில் ஒரு முழு அட்டவணையை எவ்வாறு நீக்குவாய்?

19. ஸ்டார் ஆஃபீஸ் கால்க்-ல் உள்ள பலவகையான இயக்கிகள் யாவை?

20. கைவழித் தரவுச் செயலாக்கம் என்றால் என்ன?

21. மாறிகள் – வரையறு.

22. செயற்கூறுகளின் நன்மைகள் யாவை?

23. நச்சுநிரல் என்றால் என்ன?

24. கீழ் கண்ட C++ மடக்கின் உடற்பகுதி எத்தனை முறை செயற்படுத்தப்படும்?

```
for ( int x = 1; x < 10; x++)
```

www.Padasalai.Net

## பகுதி – இ

**ஏதேனும் ஆறு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்:** 6 × 3 = 18

**வினா எண் 32க்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

25. ஸ்டார் ஆஃபீஸ் ரைட்டரில், உரை மற்றும் எழுத்து வகைகளுக்கான வடிவூட்டல் விருப்பங்களை விளக்குக.

26. ஸ்டார் ஆஃபீஸ் ரைட்டரில் அட்டவணையின் வரிசை மற்றும் நெடுவரிசையின் அகலத்தை எவ்வாறு மாற்றுவாய்?

27. வழக்கில் உள்ள புகழ்பெற்ற அட்டவணைச் செயலிகளையும் அதனை உருவாக்கிய கணிப்பொறி நிறுவனங்களையும் பட்டியலிடுக.

28. படிநிலைத் தரவுத்தளத்தைப் பற்றி குறிப்பு வரைக.

29. ஸ்டார் இம்ப்ரெஸ்-ல் சில்லுகளை சேர்த்தல், மாற்றுப் பெயரிடுதல் மற்றும் நீக்குவதற்கான வழிகளை எழுது.

30. பொருள்நோக்கு நிரலாக்கத்தின் நன்மைகள் யாவை?

31. உள்ளமை மாறிகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.



http://www.trbtnpsc.com/2018/07/12th-plus-two-official-model-question-papers-and-answer-keys-download-2018-2019.html

32. சரங்களைக் கையாளும் செயற்கூறுகளை எடுத்துக்காட்டுகளை விளக்குக.

33. செயற்கூறுகள், செயற்கூறு பணிமிகுப்பில் எவ்வாறு செயல்படுகின்றன?

பகுதி – ஈ

**கொடுக்கப்பட்டுள்ள அனைத்து வினாக்களுக்கு விடையளி:** **5 × 5 = 25**

34. விசைப்பலகை மற்றும் சுட்டியின் மூலம் தேவையான உரையை எவ்வாறு தேர்ந்தெடுப்பாய்?

(அல்லது)

பத்தி உரையாடல் பெட்டி மூலம் உரையை உள்தள்ளுதலை விளக்குக.

35. ஸ்டார் ஆபிஸ் ரைட்டரில் தலைப்பு மற்றும் அடிக்குறிப்பை எவ்வாறு உருவாக்குவாய்?

(அல்லது)

அட்டவணைத்தாளில் எண் வரிசையை எவ்வாறு உருவாக்குவாய்?

www.Padasalai.Net

36. தரவுத்தளத்தை கையாளும் வழிகளை விளக்குக.

(அல்லது)

நிகழ்த்தல் சில்லுகளைப் பார்க்க உதவும் பல்வேறு வடிவங்களை விளக்குக.

37. C++ல் சேமிப்பு இனங்களின் வகைகளை விளக்குக?

(அல்லது)

பல்வேறு வகையான மாறிகளின் வரையெல்லைகளை விளக்குக.

38. மரபுரிமத்தின் வகைகளை விளக்குக.

(அல்லது)

கீழ்க்காணும் நிரலின் வெளியீட்டை எழுதுக.

```
# include <iostream.h>
# include <conio.h>
class simple
{
```



http://www.trbtnpsc.com/2018/07/12th-plus-two-official-model-question-papers-and-answer-keys-download-2018-2019.html

```
        private:
                int a, b;
        public:
        simple ( )
{
        a = 0;
        b = 0;
        cout<< " \n Constructor of class – simple";
}
~ simple ( )
{
        cout << "\n Destructor of class – simple";
}

void getdata ( )
{
        cout << "\n  Enter values for a and b …";
        cin >> a >> b;
}

void putdata ( )
{
        cout << "\n The two integers: " << a << '\t' << b;
        cout << "\n The sum of the variables: " << a + b;
}

};

void main ( )
{
```

www.Padasalai.Net



http://www.trbtnpsc.com/2018/07/12th-plus-two-official-model-question-papers-and-answer-keys-download-2018-2019.html

```
    simple s;
    s.getdata ( );
    s.putdata ( );
}
```

*****

www.Padasalai.Net



http://www.trbtnpsc.com/2018/07/12th-plus-two-official-model-question-papers-and-answer-keys-download-2018-2019.html

# மேல்நிலை இரண்டாமாண்டு

## கணிப்பொறியியல்

### மாதிரி வினாத்தாள் - 3

நேரம் : 2.30 மணி] [மொத்த மதிப்பெண் : 70

பகுதி – அ

**சரியான விடையைத் தேர்ந்தெடு:** 15 × 1 = 15

1. செருகுமிடத்திற்கு வலது பக்கத்திலுள்ள எழுத்துக்களை அழிக்க உதவும் பொத்தான் எது?

(அ) Backspace (ஆ) Delete key (இ) Enter key (ஈ) Esc key

2. வடிவூட்டலுக்கு தேவையான கொடநிலைமைகளின் தொகுப்பு:

(அ) போல்ட் (ஆ) ஸ்டைல் (இ) ரூலர் (ஈ) புல்லட்

3. ஸ்டார் ஆஃபீஸ் ரைட்டர் அட்டவணையில், ஒன்றுக்கும் மேற்பட்ட வரிசைகளை சேர்ப்பதற்கான கட்டளை:

www.Padasalai.Net

(அ) Table → Rows → Insert (ஆ) Insert → Table → Rows

(இ) Insert → Rows → Table (ஈ) Table → Insert → Rows

4. ஒரு ஆவணத்தில் பக்க எண்களை செருகுவதற்கான கட்டளை:

(அ) Insert → Fields → Page Number (ஆ) Tools → Fields → Page Number

(இ) Format → Fields → Page Number (ஈ) Tools → Page Number → Fields

5. க்வாட்ரோப்ரோ (Quattropro) என்ற அட்டவணை செயலி பயன்பாட்டை உருவாக்கிய நிறுவனம்:

(அ) Microsoft Corporation (ஆ) Lotus Corporation

(இ) Borland International (ஈ) Sun Microsystems

6. ஸ்டார் ஆஃபீஸ் கால்க்-ல் எது ஒரு உரை இயக்கி?

(அ) & (ஆ) # (இ) + (ஈ) @

7. எந்த தரவுத்தளம் ஒரே ஒரு தரவு அட்டவணையை கொண்டுள்ளது?

(அ) ஒற்றைக் கோப்பு (ஆ) உறவுநிலை

(இ) வலைமைப்பு (ஈ) பொருள் நோக்கு

8. வேறுபட்ட செய்திகளுக்கு மாறுபட்டு செயல்படும் ஒரு பொருளின் திறனே இவ்வாறு அழைக்கப்படுகிறது?

(அ) பல்லுருவாக்கம் (ஆ) உறைப்பொதியாக்கம்

(இ) இனக்குழு (ஈ) பொருள்

9. c = 5, d = 6, ch = 'y', te = '2' எனில், கீழ்காணும் கோவையின் விடை என்ன?

(c == d) && ( ch != te)

www.Padasalai.Net

(அ) 5 (ஆ) 6 (இ) 0 (ஈ) 1

10. ஒரு செயற்கூறினுள் அல்லது தொகுதிக்குள் வரையறுக்கப்படும் மாறிகள் அந்த செயற்கூறு அல்லது தொகுதி செயல்பட்டு முடிந்த பின்னும், கணிப்பொறி நினைவகத்தில் தங்கியிருக்க எந்த பண்புணர்த்தி வகை செய்கிறது?

(அ) auto (ஆ) extern (இ) static (ஈ) register

11. எந்த தரவினம் பொது இனச்சுட்டியை அறிவிக்க பயன்படுகிறது?

(அ) static (ஆ) float (இ) const (ஈ) void

12. பின்வருவனவற்றுள், சரங்களை இணைக்கப் பயன்படும் செயற்கூறு எது?

(அ) strlen( ) (ஆ) strcpy( ) (இ) strcat( ) (ஈ) strcmp( )

13. பின்வருவனவற்றுள் பொருளுக்கு நினைவகத்தை ஒதுக்குகிறது?

(அ) ஆக்கி (ஆ) அழிப்பி (இ) மதிப்பிலி (ஈ) Static

14. தருவிக்கப்பட்ட இனக்குழுக்களை மட்டுமே உருவாக்கப் பயன்படும் இனக்குழு இவ்வாறு அழைக்கப்படுகிறது:

(அ) தரவு உறுப்புகள் (ஆ) உறுப்பு செயற்கூறுகள்

(இ) தருவிக்கப்பட்ட இனக்குழு (ஈ) கருத்தியல் இனக்குழு

15. மருத்துவ பெயர்ப்பாவண உருவாக்கம் எத்தனை படிநிலைகளை கொண்டது?

(அ) 2 (ஆ) 3 (இ) 4 (ஈ) 5

பகுதி – ஆ

**ஏதேனும் ஆறு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்:** 6 × 2 = 12

**வினா எண் 22க்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

www.Padasalai.Net

16. உரைப் பதிப்பித்தல் என்றால் என்ன?

17. ஸ்டார் ஆஃபீஸ் ரைட்டரில், புல்லட் மற்றும் எண் வரிசையை எவ்வாறு நீக்குவாய்?

18. ஏதேனும் நான்கு அட்டவணை செயலி பயன்பாடுகளை எழுதுக.

19. தேதிக் கணக்கீடு என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.

20. Handouts view மற்றும் Notes view பற்றி சிறு குறிப்பு வரைக.

21. C++ல் குறிப்பெயர்களை பற்றி எடுத்துக்காட்டுடன் சிறு குறிப்பு வரைக.

22. பின்வரும் C++ நிரல் தொகுதியின் வெளியீடு என்ன?

```
#include <iostream.h>
#include <conio.h>
void main( )
{
  clrscr( );
  int i = 3, x ;
```

```
  x = i > 0 ? i++ : ++i;
  cout << x;
  getch( );
}
```

23. switch கூற்றின் தொடரியலை எழுதுக.

24. C++ செயற்கூறின் நன்மைகள் யாவை?

பகுதி – இ

**ஏதேனும் ஆறு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்:** 6 × 3 = 18

**வினா எண் 32க்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

25. பின்வருவனவற்றுக்கு விடையளி:

(அ) ஸ்டார் ஆஃபீஸ் ரைட்டரில், வரிசை மற்றும் நெடுவரிசை நீக்குதல்

(ஆ) ஸ்டார் ஆஃபீஸ் ரைட்டரில், முழு அட்டவணையை நீக்குதல்

26. ஸ்டார் ஆஃபீஸ் ரைட்டரில் பக்க அமைவு உரையாடல் பெட்டியை பயன்படுத்தி, ஒரு ஆவணத்தின் பக்க ஓரங்களை எவ்வாறு மாற்றுவாய்?

www.Padasalai.Net

27. ஸ்டார் ஆஃபீஸ் கால்க்-ல் Fill கட்டளை சிறு குறிப்பு வரைக.

28. ஸ்டார் ஆஃபீஸ் பேஸ்-ல் வடிகட்டிகளைப் பற்றி சிறு குறிப்பு வரைக.

29. பின்வருவனவற்றுக்கு சிறு குறிப்பு வரைக: (அ) MPEG (ஆ) AVI

30. பின்வருவனவற்றுக்கு சிறு குறிப்பு வரைக: (அ) பொருள் (ஆ) உறைப்பொதியாக்கம்

31. பின்வரும் C++ நிரல் தொகுதியின் வெளியீட்டை எழுதுக.

```
#include <iostream.h>
#include <conio.h>
void main( )
{
  clrscr( );
  int a[ ] = {1, 2, 3, 4, 5 };
       for (int i=0; i<4; i++)
```

```
                a[i+1] = a[i];
            for (int i=0; i<5; i++)
                cout << '\n' << a[i];
    getch( );
}
```

32. பின்வரும் விவரங்களுக்கு, ஒரு இனக்குழுவை வரையறுக்கவும்:

இனக்குழு பெயர்: product

தரவு உறுப்புகள்: product_id, product_name, product_price, quantity

கீழ்காணும் செயல்களுக்கான உறுப்பு செயற்கூறுகள்:

(i) தரவு உறுப்புகளுக்கான மதிப்புகளை உள்ளீடு பெறுவதற்கு

(ii) மொத்த தொகை கணக்கிட

(iii) product விவரங்களை வெளியிட

33. static உறுப்பு பற்றி குறிப்பு வரைக.

www.Padasalai.Net

பகுதி – ஈ

**கொடுக்கப்பட்டுள்ள அனைத்து வினாக்களுக்கு விடையளி:** 5 × 5 = 25

34. ஒரு ஆவணத்தை தட்டச்சு செய்து முடித்த பின் அதன் பிழைகளை எவ்வாறு காணலாம்?

(அல்லது)

சார்புகள் என்றால் என்ன? அட்டவணைத் தாளில், SUM சார்பை சேர்ப்பதற்கான வழிமுறைகளை விவரி.

35. அட்டவணை செயலியில், படம் மற்றும் சிறப்புக் குறியீடுகளை எவ்வாறு சேர்ப்பாய்?

(அல்லது)

கணிப்பொறிவழி தரவு செயலாக்கத்தின் நன்மைகள் யாவை?

36. ஒரு உரை ஆவணத்தில், Calc cell பயன்பாட்டை சேர்ப்பதற்கான வழிமுறைகளை விளக்குக.

(அல்லது)

தனிப்பயன் சில்லுக்காட்சிகளை எவ்வாறு உருவாக்குவாய்?

37. கொடுக்கப்பட்டுள்ள C++ நிரலை அடிப்படையாக கொண்டு, பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்:

```
#include <iostream.h>
#include <conio.h>
void main( )
{
  clrscr( );
  int x=3, y=4, ctr=2, res=x;
  while (ctr <= y)
  {
      res *= x;
      ctr += 1;
  }
  cout << "\n x to the power of y is " << res;
  getch( );
}
```

www.Padasalai.Net

(i) மேலே கொடுக்கப்பட்ட நிரலில் உள்ள கட்டுப்பாட்டு மாறி எது?

(ii) மேலே கொடுக்கப்பட்ட மடக்கு எத்தனை முறை இயங்கும்?

(iii) மடக்கின் உடற்பகுதியில் உள்ள கூற்றுகள் யாவை?

(iv) மேலே கொடுக்கப்பட்ட நிரலின் நிபந்தனை கோவை எது?

(v) மேற்கண்ட நிரலின் வெளியீடு என்ன?

(அல்லது)

வட்டம், சதுரம் மற்றும் முக்கோணத்தின் பரப்பளவைக் காணும் C++ நிரல் ஒன்றை, செயற்கூறு பணிப்பு கோட்பாட்டை பயன்படுத்தி எழுதுக.

38. *for'* மடக்கு பொதுவாக செயல்படும் விதத்தை பொருத்தமான எடுத்துக்காட்டுடன் விவரி.

(அல்லது)

கீழ்காணும் C++ நிரலை படித்து, அதிலுள்ள பிழைகளை திருத்தி, சரியான நிரலை எழுதுக.

```
$include <IOSTREAM>
class base
{
        PUBLIC;
                Base[ ]
                {
                 cout >> "\n Constructor of base class";
                }
                +Base( );
                {
                cout << "\n Destructor of base class;
                }
}
class base :: public derived
{
        public:
                derived( )
                {
                COUT << "\n Constructor of Derived";
                }
```

```
            ~derived[ ]
            {
            Cout >> "\n Destructor of Derived";
            }
};
VOID MAIN ( )
{
       clrscr( );
       derived x;
       getch( );
}
```

******

www.Padasalai.Net